முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 553**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**04.04.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா போற்றி
ஞானமாக உலகோருக்கு நல்வழி காட்ட
ஞானபண்டிதன் என் சக்தியாக வந்த அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
ஆற்றல்கூட்டி அரங்கனே உந்தனுள்
ஆறுமுகன்யான் நித்தம்நித்தம் அருளிவர
3. அருளுகின்ற எந்தன் சக்தியாலே
அரங்கா இந்த உலகில் நீ அற்புதம் நிகழ்த்தி வருகின்றாய்
வரங்கள் கூடி உன் வழி வரும் மக்களுக்கும்
வடிவேலன் சூட்சும சக்தி வழங்கி வருகின்றேன்
4. வருகவே ஞானக்குடில் ஓங்காரக்குடிலில்
வல்லமையான வடிவேலன் சக்தி நிரம்பி இருக்க
தானதர்ம நோக்கம் கொண்டு உலகில் வரும் மக்களெல்லாம்
தர்மவான்கள் ஆவதோடு ஞானவான்கள் ஆகி இனிதே
5. இனிதே அரங்கன் உன் வழி ஞானசித்தி யோகசித்தி
இணையில்லாது ஜீவமுக்தி நிலையும் பெறுவர்
தயவான அரங்கன் தர்மத்தை
தன்னார்வ தொண்டாக ஏற்று செய்யும் மக்களெல்லாம்
6. மக்களெல்லாம் எந்தன் அருள்பெறுவதோடு
மண்ணுலகை மாற்றும் ஞானவான்களாக மாறி
தேக்கமின்றி அரங்கன் நோக்கமான
தெய்வபலமிக்க ஞானயுகமாற்றத்தை
7. மாற்றத்தை செய்து இந்த கலியில் மகத்துவம் கூடி சிறப்பர் என்பேன்
ஆற்றல்பட அரங்கன் நீயே சிறந்த குரு அழியாமை தருகின்ற ஒரே ஞானகுரு
மாற்றம் உன்னால் இனிதே நடந்தேறும்
மகத்துவம்பட உனக்குள் யான் இருந்து இனிதே
8. இனிதே இந்த அற்புதத்தை நடத்தி அருள்வேன்
இணைந்து அரங்கஞானி உன்வழி இந்த உலகம்
கனிந்து தர்மவழி தொடர்ந்து இருக்க
கலியுகம் ஞானயுகமாற்றம் பெறும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.